# ஒழுக்கவியல் அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்டு சூழல் பிரச்சினைகள் தொடர்பான விமர்சன ஆய்வு

**Supervisor**
*Mr. N. Sivakaran,*
*Lecturer,*
*Department of Philosophy,*
*University of Jaffna*

**Researcher**
*Mr. S. Kajannath,*
*Department of Philosophy,*
*University of Jaffna*

## ஆய்வுச் சுருக்கம்

சமகால உலகில் அதிக முக்கியத்துவம் பெறுகின்ற பிரச்சினையாக சூழல்பிரச்சனை அமைந்து விளங்குகிறது. சூழல் பிரச்சினை என்பது ஒரு நாட்டுக்குரிய பிரச்சினை அல்லாது பூகோள முழுமைக்குமான பிரச்சினையாக காணப்படுகின்றது. மெய்யியலில் 1950ஆம் ஆண்டளவில் இருந்து மேலைத்தேய மெய்யியலிலும் கீழைத்தேய மெய்யியலிலும் ஆய்வுக்குரிய முக்கிய ஒழுக்கப் பிரச்சினையாக சூழல் பிரச்சினை இருந்து வருகின்றது. நாடுகளின் போட்டி, வல்லாதிக்கம், விஞ்ஞான வளர்ச்சிகள், கைத்தொழில்புரட்சிகள், வளங்களின் ஊடாக நாடுகளின் வளர்ச்சி, மனிதனின் சூழல் அக்கறையின்மை போன்றன இன்று முக்கிய சூழல் பிரச்சினையாக மாறிவருகின்றது. இக்கட்டுரையில் மனிதனிற்கும் சூழலுக்கும் இடையிலான பரஸ்பர உறவினை வலியுறுத்துவதன் மூலம் நிலையான வாழ்க்கையினை உறுதிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகிறது. மக்களிடம் சூழல் தொடர்பான தெளிவான அறிவினை பரப்புதல், எதிர்கால சந்ததியினருக்காக இப்போது வாழும் மக்களின் வாழ்க்கையினை எவ்வாறு சூழலுடன் ஒன்றிணைப்பது என்பது தொடர்பான சிந்தனைகளினை தெளிவுபடுத்துவதாக இவ்வாய்வு அமையவுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் அளவினை அளவுமீறி தனது குறுகிய காலப் பாவனைக்காக பகுத்தறிவின்றிச் செயற்படுதல் பிரச்சினையாக உள்ளது. அண்மைக்காலமாக நிலப்பாவனை, காலநிலை மாற்றம் என்பன முக்கிய பிரச்சினையாகவுள்ளது. சூழல் சார்ந்த பிரச்சினையினை மனிதனின் ஒழுக்கம் சார்ந்த சிந்தனைகளோடு பொருத்திப் பார்ப்பதன் மூலம் சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்தலாம் என்பது எனது ஆய்வின் நோக்கம். சூழல் சார்ந்த பிரச்சினை உலகம் சார்ந்த பிரச்சினையாக விளங்குவதனால் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் சூழல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தலும் அதனை சிறுவயதிலிருந்தே பாடமாக்குதல் மூலம் சூழல் பிரச்சினையைக் குறைக்கலாம். இயற்கையுடன் ஒருமித்து இணைந்து வாழ்வதன் மூலமே பிற்பட்ட எமது சந்ததியினை இயற்கையிலிருந்து எவ்வித அழிவும் இன்றி காப்பாற்ற முடியும் என்பது இவ்வாய்வின் நோக்கமாகும். பகுத்தறிவுள்ள மனிதனின் திட்டமிடாத செயன்முறையின் மூலம் அளவுகடந்த இயற்கை வளங்களின் நுகர்ச்சியே சூழல் பிரச்சினைக்கு முக்கிய காரணம் மனிதன் தான் சூழலில் ஒரு பகுதியென உணர்தல். இவ்வாறான சூழல் பிரச்சினை தீர்க்கமுடியாது போனால் எதிர்கால சந்ததி பெரிய ஆபத்திற்குள்ளாகும் என்பதனை இவ்வாய்வு வலியுறுத்தவுள்ளது. இக்கட்டுரையானது, ஒப்பீட்டு ஆய்வு முறை, விமர்சன முறை, பகுப்பாய்வு முறை என்பவற்றின் துணை கொண்டு வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் இக்கட்டுரைக்கு வேண்டிய தரவுகளானவை பிரதானமாக இரண்டாம் நிலைத்தரவுகளினை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டுள்ளது.

**Key words:** சூழல்பிரச்சனை, சூழல் ஒழுக்கம், மனித நடத்தை, காலநிலை மாற்றம்